**செங்கோட்டை நகர்மன்றத்தின் சாதாரண கூட்டம் 15.12.2022 அன்று காலை 11.00 மணிக்கு நடைபெற்றதின் நடவடிக்கைகள்**

**மன்றப் பொருள் 01 :**

15வது நிதிக்குழு மானியம் 2021–2022 Un–Tied நிதியின் கீழ் ரூ.3.95 லட்சம் மதிப்பீட்டில் 48 எண்ணங்கள் LED விளக்குகள் கொள்முதல் செய்யவும், இத்திட்டத்தின் கீழ் அனுமதிக்கப்பட்ட மானியம் ரூ.2.38 லட்சம் போக மீதமுள்ள தொகை ரூ.1.57 இலட்சம் நகராட்சி வருவாய் நிதியில் செலவிடவும் நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் ந.க.எண்:31116/2021/CFC–1, நாள்:14.10.2022–ன்படி நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அனுமதிக்கப்பட்ட மானியத்தை விட கூடுதலான செலவினம் ரூ.1.57 இலட்சம் வருவாய் நிதியில் செலவிட மன்றத்தின் அனுமதிக்கு

அலுவலக குறிப்பு :

1. மன்றம் அனுமதிக்கலாம்.

2.பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி பெற நடவடிக்கை மேற்கொண்டமைக்கும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் எண் 158 ; மன்றம் அனுமதிக்கப்பட்டது.**

**மன்றப் பொருள் 02 :**

செங்கோட்டை நகராட்சி அலுவலக ஜெனரேட்டரின் Battery 10 வருடங்களுக்கு மேலாக பயன்படுத்தி வருவதால் Battery மிகவும் பழுதடைந்து ஜெனரேட்டர் இயங்காமல் உள்ளது. இதனால் மின்சாரம் இல்லாத நேரங்களில் அலுவலக பணிகள் பாதிப்படைகிறது. எனவே மேற்படி ஜெனரேட்டருக்கு புதிதாக பேட்டரிகள் வாங்குவதற்கு ரூ.9850/– செலவாகும். மேற்படி ஜெனரேட்டருக்கு புதிதாக பேட்டரிகள் வாங்குவதற்கும் அதற்கான செலவினம் ரூ. 9850/–ஐ வருவாய் நிதியில் செலவிடவும் மன்றத்தின் அனுமதிக்கு.

அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண் 159 ; மன்றம் அனுமதிக்கப்பட்டது.**

**மன்றப் பொருள் 03 :**

செங்கோட்டை நகராட்சி MCC–களிலுள்ள Bed block சரி செய்யும் பணிக்கு 20.10.2022 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும்.

| வ.எண் | ஒப்பந்தக்காரர் பெயர் | ஒப்பந்த விகிதம் |
|---|---|---|
| 1 | திரு.M.அசன்கனி | மதிப்பீட்டை விட 1.96% அதிகம் |
| 2 | திரு.K.சங்கர் | மதிப்பீட்டை விட 0.01% குறைவு |

அலுவலக குறிப்பு :

வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் வ.எண்:2-ல் திரு.K.சங்கர் என்பவரால் கொடுக்கப்பட்ட குறைந்த ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண் 160 ; மன்றம் அனுமதிக்கப்பட்டது.**

**மன்றப் பொருள் 04 :**

கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டம் 2022-2023-ன் கீழ் ரூ.31.00 இலட்சம் மதிப்பீட்டில் இந்நகராட்சிக்கு சொந்தமான அண்ணா பூங்காவினை மேம்படுத்தும் பணிகள் மேற்கொள்ள 22.11.2022 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டத்தில் வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், ஒப்புதலுக்கும்.

| வ.எண் | ஒப்பந்தக்காரர் பெயர் | ஒப்பந்த விகிதம் |
|---|---|---|
| 1 | திரு.சின்னதம்பி | மதிப்பீட்டை விட 4.60% கூடுதல் |
| 2 | திரு.E.சரவணன் | மதிப்பீட்டு விகிதம் |

அலுவலக குறிப்பு :

1. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விகிதத்தில் ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு.E..சரவணன் என்பவரது ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் அனுமதிக்கலாம்

2.பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று திரு.E.சரவணன் என்பவருக்கு வேலை உத்தரவு வழங்கியமைக்கும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் எண் 161 ; மன்றத்தின் அலுவலக குறிப்பு ஏற்று அனுமதி வழங்கப்பட்டது.**

**மன்றப் பொருள் 05 :**

கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டம் 2022-2023-ன் கீழ் ரூ.8.00 இலட்சம் மதிப்பீட்டில் இந்நகராட்சிக்கு சொந்தமான முஸ்தபா பார்க் மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ள 22.11.2022 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டத்தில் வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், ஒப்புதலுக்கும்.

| வ.எண் | ஒப்பந்தக்காரர் பெயர் | ஒப்பந்த விகிதம் |
|---|---|---|
| 1 | திரு.K.சங்கர் | மதிப்பீட்டை விட 0.10% குறைவு |
| 2 | திரு.S.பரமசிவன் | மதிப்பீட்டை விட 3.32% அதிகம் |

அலுவலக குறிப்பு :

1. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் திரு.K.சங்கர் என்பவரால் கொடுக்கப்பட்டுள்ள குறைந்த ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் அனுமதிக்கலாம்.

2.பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று திரு.கே.சங்கர் என்பவருக்கு வேலை உத்தரவு வழங்கியமைக்கும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

<u>**தீர்மானம் எண் 162 ; மன்றத்தின் அலுவலக குறிப்பு ஏற்று அனுமதி வழங்கப்பட்டது.**</u>

<u>**மன்றப் பொருள் 06 :**</u>

தூய்மை பாரத இயக்கம் (Urban 2.0) திட்டத்தின் கீழ் செங்கோட்டை நகராட்சி உரக்கிடங்கில் Bio-Mining திட்டம் செயல்படுத்திட ரூ.1.64 கோடி நிதி ஒதுக்கீடு செய்து நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண்:19009/2022/SBM-1, நாள்:25.11.2022ன்படி நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேற்படி தொகையில் மத்திய அரசு மானியம் 50%, மாநில அரசு மானியம் 33% மற்றும் நகராட்சி பங்கு தொகை 17% செலவிடவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. 17% பங்குத் தொகை ரூ.27,88,000/- வருவாய் நிதியில் செலவிட மன்றத்தின் அனுமதிக்கு.

அலுவலக குறிப்பு :

1. மன்றம் அனுமதிக்கலாம்.

2. பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று தொழில் நுட்ப அனுமதி பெற மேல்நடவடிக்கை மேற்கொண்டமைக்கும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

<u>**தீர்மானம் எண் 163 ; மன்றம் அனுமதி வழங்கப்பட்டது.**</u>

<u>**மன்றப் பொருள் 07 :**</u>

சிறப்புச் சாலைத் திட்டம் 2020-2021ன் கீழ் இந்நகராட்சி பகுதியில் மேற்கொள்ளப்பட்ட சாலை மேம்பாட்டு பணிகளுக்கு ரூ.19854000/- TUFIDCO நிறுவனம் மூலம் கடனாக பெறவும், மேற்படி கடன் தொகைக்கு ஆண்டுக்கு 8.65% வட்டி வீதத்தில் காலாண்டிற்கு ரூ.10.13 லட்சம் வீதம் 34 தவணைகள் திருப்பி செலுத்தவும் அதற்கான செலவினத்தை வருவாய் மற்றும் மூலதன நிதியில் செலவிடவும் மன்றத்தின் அனுமதிக்கு.

அலுவலக குறிப்பு :

1. மன்றம் அனுமதிக்கலாம்.

2.அவசர அவசியம் கருதி நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று முன்மொழிவுகள் சமர்ப்பித்தமைக்கும் மன்றம் அனுமதிக்கலாம்.

<u>**தீர்மானம் எண் 164 ; மன்றம் அனுமதி வழங்கப்பட்டது.**</u>

**<u>மன்றப் பொருள் 08 :</u>**

செங்கோட்டை நகராட்சி அலுவலகத்தில் புதிதாக நகராட்சி அலுவலக கட்டிடம் மற்றும் டவுண்ஹால் ரோடு பகுதியில் உள்ள Community Hall ஆகிய இரண்டு பணிகளுக்கும் விரிவான திட்ட அறிக்கை தயார் செய்து அனுப்பி வைக்க நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களால் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே மேற்படி இரண்டு பணிகளுக்கும் Consultancy மூலம் மதிப்பீடு தயார் செய்வதற்கும் அதற்கான செலவினத்தை வருவாய் நிதியில் செலவிடவும் மன்றத்தின் அனுமதிக்கு.

அலுவலக குறிப்பு ; மன்றம் அனுமதி வழங்கலாம்.

**<u>தீர்மானம் எண் 165 ; அனுமதி வழங்கப்பட்டது.</u>**

**<u>மன்றப் பொருள் 09 :</u>**

செங்கோட்டை நகராட்சி பகுதியில் 113 எண்ணிக்கை கைஅடிபம்புகள் உள்ளன. இதில் 14 எண்னிக்கை கைஅடிபம்புகள் தார்சாலை மட்டத்தை விட தாழ்வாக உள்ளது. இதனால் மேற்படி கைஅடிபம்புகளை பொதுமக்கள் பயன்படுத்த இயலாத நிலையில் உள்ளது. எனவே தார்ச்சாலை மட்டத்தை விட கூடுதலாக உயர்த்தி அடிபம்பு அமைக்க ரூ.125000/-ற்கு உத்தேச மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்படி பணியினை மேற்கொள்ளவும், அதற்கான செலவினத்தை குடிநீர் நிதியில் செலவிடவும் மன்றத்தின் அனுமதிக்கு.

அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>தீர்மானம் எண் 166 ; மன்றம் அனுமதி வழங்கப்பட்டது.</u>**

**<u>மன்றப் பொருள் 10 :</u>**

தொழிலாளர் வருங்கால வைப்புநிதி திட்ட ஆணையாளர் அவர்கள் தமது 14.10.2019ம் தேதிய உத்தரவின் மூலம் ரூ.1,69,07,686/- EPF Organization-க்கு கட்ட வேண்டும் என உத்தரவிடப்பட்டது. மேற்படி உத்தரவினை எதிர்த்து Central Government Industrial Tribunal, Chennai-ல் நகராட்சி சார்பாக மேல்முறையீடு செய்யப்பட்டது. மேற்படி மேல் முறையீட்டு மனு மீது நடவடிக்கை மேற்கொண்ட தீர்ப்பாயத்தின் உத்தரவில் ரூ.16907686/-ல் 35% தொகை ரூ.5917690/-ஐ 13.12.2022-க்குள் EPF Organization-க்கு Deposit ஆக செலுத்த வேண்டும் என இடைக்கால உத்தரவு வழங்கப்பட்டுள்ளது. எனவே மேற்படி EPF Tribunal இடைக்கால உத்தரவில் தெரிவிக்கப்பட்டுள்ள தொகை ரூ.5917690/- ஐ குறைவு செய்யக்கோரி சென்னை உயர்நீதிமன்றம் மதுரை கிளையில் இந்நகராட்சி சார்பாக Writ Petition தாக்கல் செய்யப்பட்ட வகைக்கு வழக்கு கட்டணம் ரூ.30,000/- (ம) நீதிமன்ற செலவுகள் ரூ.10,000/- ஆக மொத்தம் ரூ.40,000/-வழங்க திரு.M.பாண்டியராஜன் வழக்கறிஞரின் 18.11.2022ம் நாளைய கடிதத்தில் கோரப்பட்டுள்ளது. மேற்படி வழக்கு கட்டணம் திரு.M.பாண்டியராஜன் வழக்கறிஞருக்கு வழங்கவும், அதற்கான செலவினத்தை வருவாய் நிதியில் செலவிடவும் மன்றத்தின் அனுமதிக்கு.

அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>தீர்மானம் எண் 167 ; அனுமதி வழங்கப்பட்டது.</u>**

**<u>மன்றப் பொருள் 11 :</u>**

அரசாணை (நிலை) எண் 52 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.நி4) துறை நாள் 30–03–2022ல் தெரிவிக்கப்பட்டுள்ளதன் படி சொத்துவரி காலிமனை வரி பொது சீராய்வு மேற்கொள்ள இருப்பதால் சிறப்பு கேட்பு அறிவிப்பு கடிதம் அச்சுப் பணி மேற்கொள்ள பதிவு செய்த கூட்டுறவு நிறுவனத்திடமிருந்து விலைப்புள்ளி கோருவதற்கும் அதற்கு ஆகும் உத்தேச செலவினத்திற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

(ந.க.எண் ; 274/2022/அ1)

அலுவலகக் குறிப்பு ; மன்றம் அனுமதி வழங்கலாம்.

**<u>தீர்மானம் எண் 168 ; அனுமதி வழங்கப்பட்டது.</u>**

**<u>மன்றப் பொருள் 12 :</u>**

செங்கோட்டை நகராட்சி சொத்துவரி சீராய்வு சிறப்பு கேட்பு அறிவிப்பு படிவம் அச்சுப் பணிகள் மேற்கொள்ள அரசு அனுமதி பெற்றுள்ள தகுதியான கூட்டுறவு நிறுவனத்திடமிருந்து விலைப்புள்ளி கோருவதற்கு நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி நாள் 07–11–2022ல் ஒப்புதல் வழங்கியுள்ளதன் படி சிறப்பு கேட்பு அறிவிப்பு அச்சுப் பணிகள் உடன் மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளன மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | பணிகளின் விபரம் | ஸ்ரீ பாலமுருகன் ஆப்செட், 452, தென்காசி ரோடு, IDBI Bank எதிரில், இராஜபாளையம் என்பவருடைய ஒப்பந்தக் கேள்வி (1 படிவத்திற்கு) ரூ | மேலகரம் பிரிண்டிங் ஒர்க்கர்ஸ் இண்டஸ்ட்ரியல் கோ ஆப்ரேட்டிவ் சொஸைட்டி லிமிடெட், 41/24A, ராஜா கோவில் தெரு, தென்காசி என்பவருடைய ஒப்பந்தக் கேள்வி (1 படிவத்திற்கு) ரூ |
|---|---|---|---|
| 1 | சொத்துவரி சீராய்வு சிறப்பு கேட்பு அறிவிப்பு படிவம் அ4 வடிவில் அச்சுப் பணிகள் மேற்கொள்ளும் பணி. | 3.25/- | **3.00/–** |

அலுவலகக் குறிப்பு ;

1. குறைவான விலைப்புள்ளி வழங்கிய மேலகரம் பிரிண்டிங் ஒர்க்கர்ஸ் இண்டஸ்ட்ரியல் கோ ஆப்ரேட்டிவ் சொஸைட்டி லிமிடெட், தென்காசி என்ற நிறுவனத்தின் ஒப்பந்தக் கேள்வித் தொகைக்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. முன்றத்தின் அனுமதியினை எதிர்நோக்கி அவசர அவசியம் கருதி நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியமைக்கும், குறைவான விலைப்புள்ளி வழங்கிய கூட்டுறவு நிறுவனத்திற்கு வேலை உத்தரவு வழங்கியமைக்கும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

**<u>தீர்மானம் எண் 169 ; அலுவலக குறிப்பை ஏற்று அனுமதி வழங்கப்பட்டது.</u>**

**மன்றப் பொருள் 13 :**

செங்கோட்டை நகராட்சி வரியில்லா இனங்கள் 2019-2020ம் ஆண்டு தணிக்கை முடிவடைந்த நடப்பு மற்றும் நிலுவைக் கேட்புப் பதிவேட்டில் 2019 நாடாளுமன்றத் தேர்தல் நன்னடத்தை விதிகளின் காரணமாக மூன்று மாதத்திற்கு 01-04-2019 முதல் 20-06-2019 வரை மட்டும் கீழ்கண்ட ஆண்டு குத்தகை இனத்தினை பழைய குத்தகைதாரர் அனுபவித்துக் கொள்ள உத்தரவு வழங்கப்பட்டுள்ளது. அதன் படி தொகைகள் மூன்று மாதத்திற்கு உரியத் தொகைகள் குத்தகைதாரரிடமிருந்து வசூல் செய்யப்பட்டுவிட்டது. ஆனால் தற்பொழுது வரை வசூல் செய்த குத்தகைத் தொகையானது குத்தகை இனம் நிலுவை மற்றும் நடப்பு கேட்புப் பதிவேட்டில் நிலுவையாக உள்ளதால் கீழ்காணும் தொகையினை நிலுவை மற்றும் நடப்புப் பதிவேட்டில் இருந்து நீக்கம் செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ. எண் | குத்தகை இனம் | குத்தகைதாரர் பெயர் | அனுபவித்த மாதம் | குத்தகைத் தொகை | காசோலைப் பதிவேடு |
|---|---|---|---|---|---|
| 1 | செங்கோட்டை நகராட்சி சாலையோர வியாபாரிகளிடமிருந்து கட்டணம் வசூல் செய்து கொள்ளும் உரிமம் | திரு.பி.வி.நடராஜன் 36,சிவனுபாண்டி விலாஸ், இராமசாமி தெரு, செங்கோட்டை | 01-04-2019 முதல் 19-06-2019 வரை | Lease = 49296<br>Service tax = 8873<br>Total = 58169/- | 2019-2020 பதிவேடு<br><br>வரிசை எண் 11,<br>தொகை = 73,422 |
| 2 | செங்கோட்டை நகராட்சி வாரச் சந்தை இடத்தில் கட்டணம் வசூல் செய்து கொள்ளும் உரிமம். | | 01-04-2019 முதல் 19-06-2019 வரை | Lease = 49296<br>Service tax = 8873<br>Total = 58169/- | |
| 3 | செங்கோட்டை நகராட்சி பேருந்து நிலையத்திற்கு வந்து செல்லும் பேருந்துகளுக்கு நுழைவுக் கட்டணம் வசூல் செய்து கொள்ளும் உரிமம் | துறை மூலம் வசூல் செய்யப்பட்டது | 01-04-2019 முதல் 19-06-2019 வரை | 52,624/- | துறைமூலம் வசூல் செய்த பதிவேடு 1 & 2<br><br>Total = 66,746<br>(Account Head = 1808002) |
| 4 | செங்கோட்டை நகராட்சி பேருந்து நிலைய வளாகத்தில் உள்ள கட்டணக் கழிப்பறையில் வசூல் செய்து கொள்ளும் உரிமம். | துறை மூலம் வசூல் செய்யப்பட்டது | 01-04-2019 முதல் 19-06-2019 வரை | 14,122/- | |

(ந.க.எண் ;3090/2015/அ1)

அலுவலகக் குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண் 170 ; அனுமதி வழங்கப்பட்டது.**

**மன்றப் பொருள் 14 :**

செங்கோட்டை நகராட்சி அலுவலகப் பணிக்கு உபயோகப்படுத்தப்பட்டு வரும் பிரிண்டர்களுக்கு Toner Refilling உடன் செய்ய வேண்டி இருப்பதால், பணியின் அவசர அவசியம் கருதி தகுதியான உள்ளூர் நிறுவனத்திடமிருந்து மன்றத்தின் முன் அனுமதியினை எதிர்நோக்கி விலைப்புள்ளி கோரியதில் கீழ்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளது மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | பணியின் விபரம் | உள்ளூர் நிறுவனத்தின் பெயர் மற்றும் முகவரி | விலைப்புள்ளி ரூ. |
|---|---|---|---|
| 1 | Toner Refilling and Drum Refilling Work | பிரண்ட்ஸ் கம்ப்யூட்டர்ஸ், செங்கோட்டை | ரூ.400/ One Toner<br>ரூ.300/ One Drum |
| 2 | | மைக்ரோ கம்ப்யூட்டரஸ், தென்காசி | ரூ.350/ One Toner<br>ரூ.250/ One Drum |

(ந.க.எண் ;902/2017/டி2)

அலுவலகக் குறிப்பு ;

1. பெறப்பட்ட இரண்டு விலைப்புள்ளிகளில் குறைவான விலைப்புள்ளி வழங்கிய மைக்ரோ கம்ப்யூட்டரஸ், தென்காசி நிறுவனத்தின் விலைப்புள்ளியினை மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மன்றத்தின் அனுமதியினை எதிர்நோக்கி பணியின் அவசர அவசியம் கருதி விலைப்புள்ளி கோரியமைக்கும், வேலை உத்தரவு வழங்கியமைக்கும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் எண் 171 ; அலுவலக குறிப்பை ஏற்று அனுமதி வழங்கப்பட்டது.**

**மன்றப் பொருள் 15 :**

செங்கோட்டை நகராட்சி பொது சுகாதாரப் பிரிவு LCV வாகனம் எண் TN76 AM 3422 மற்றும் TN 76 AM 3463 இரண்டு வண்டிகளுக்கும் பேட்டரிகள் வாங்கப்பட்டு 4 வருடங்கள் மேலாகிவிட்டதாலும், தற்பொழுது பேட்டரிகளின் மின்சாரம் சேமிப்புத் திறன் குறைந்து விட்ட காரணத்தினால் வண்டிகளை இயக்க இயலாமல் இருந்து வருகிறது. எனவே பணியின் அவசர அவசியம் கருதி இரண்டு வண்டிகளுக்கும் புதிதாக பேட்டரிகள் கொள்முதல் செய்திடவும், அதற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ,9000/- தொகையினை வருவாய் மற்றும் மூலதன நிதியில் இருந்து செலவிட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

(ந.க.எண் ; 804/2020/எச்1)

அலுவலகக் குறிப்பு ; மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் எண் 172 ; அனுமதி வழங்கப்பட்டது.**

**மன்றப் பொருள் 16 :**

செங்கோட்டை நகராட்சி பகுதியில் 24 வார்டுகள் உள்ளது. மொத்த மக்கள் தொகை 27614 ஆகும். மொத்த குப்பை உற்பத்தி 6.16 டன். மக்கும் குப்பை 3.81 டன், மக்காத குப்பை 2.35 டன் ஆகும். மேற்கண்ட 24 வார்டுகளிலும் தற்பொழுது தூய்மை பணியாளர்கள் (தனியர்) 20 தள்ளுவண்டிகள் மூலமாக வீடு, வீடாக சென்று குப்பைகளை மக்கும் குப்பை, மக்காத குப்பை என தரம் பிரித்து வாங்கும் பணியினை மேற்கொண்டு வருகின்றனர். தற்போது அனைத்து தள்ளு வண்டிகளிலும் (20 எண்ணம்) டயர்கள் மற்றும் ரோலர் டயர் உள்ளிட்ட பாகங்களில் சிறு, சிறு பழுதுகள், தேய்மானம் உள்ளிட்ட பாதிப்புகளால் தூய்மை பணியாளர்கள் தெருக்களில்

தள்ளுவண்டிகளில் குப்பைகளை பெற்றுக் கொண்டு தள்ளு வண்டிகளை தள்ள இயலாமல் பெரிதும் சிரமப்படுகின்றனர். இதனால் திடக்கழிவு மேலாண்மை பணிகளில் தொய்வு ஏற்படுகிறது. எனவே மேற்கண்ட விவரப்படி 20 தள்ளுவண்டிகளையும் பழுது நீக்கம் செய்வதற்கும் அதற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.90,000/-க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

(ந.க.எண் ; 804/2020/எச்1)

அலுவலக குறிப்பு :

1. ஒப்பந்தப்புள்ளி பெற்று நடவடிக்கை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
2. உத்தேச செலவினத்தினை வருவாய் மற்றும் மூலதனநிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் எண் 173 ; அலுவலக குறிப்பை ஏற்று அனுமதி வழங்கப்பட்டது.**

**மன்றப் பொருள் 17 :**

இந்நகராட்சியில் பணியாற்றி வரும் ஓட்டுநர்கள், துப்புரவு பணி மேற்பார்வையாளர்கள் மற்றும் துப்புரவு பணியாளர்கள் ஆகியோர்களுக்கு 2022-2023 ஆம் ஆண்டிற்கு பொங்கல் பண்டிகைக்கு முன்பாக சீருடைகள் வழங்கிட வேண்டி உள்ளதால், கோ ஆப் டெக்ஸ், திருநெல்வேலி அரசு நிறுவனத்தின் மூலம் கீழ்க்கண்டவாறு சீருடைகள் கொள்முதல் செய்வதற்கும் அதற்கு ஆகும் செலவு தொகை ரூ.18643/- தொகையினை கோ ஆப் டெக்ஸ் நிறுவனத்திற்கு வழங்கிடவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**1. காக்கி கலர் பேண்ட் துணி விபரம் :**

| வ.எண் | விபரம் | நபர்கள் | ஒரு நபருக்கு 2 சீருடைகள் (மீ) | மொத்த அளவு (மீ) |
|---|---|---|---|---|
| 1 | தூய்மை பணியாளர்கள் ஆண்கள் (1.30 மீx2) | 12 | 2.60 | 31.20 |
| 2 | துப்புரவு பணி மேற்பார்வையாளர்கள் ஆண்கள் (1.30மீx2) | 03 | 2.60 | 07.80 |
| 3 | ஓட்டுநர்கள் ஆண்கள் (1.30மீx2) | 03 | 2.60 | 07.80 |
| மொத்த அளவு (மீட்டரில்) | | | | **46.80** |

**2. காக்கி சட்டை துணி விபரம் :**

| வ.எண் | விபரம் | நபர்கள் | ஒரு நபருக்கு 2 சீருடைகள் (மீ) | மொத்த அளவு (மீ) |
|---|---|---|---|---|
| 1 | தூய்மை பணியாளர்கள் ஆண்கள் (1.75 மீx2) | 12 | 3.50 | 42.00 |
| 2 | துப்புரவு பணி மேற்பார்வையாளர்கள் ஆண்கள் (1.75மீx2) | 03 | 3.50 | 10.50 |

| | | | | |
|---|---|---|---|---|
| 3 | ஓட்டுநர்கள் ஆண்கள் (1.75மீx2) | 03 | 3.50 | 10.50 |
| மொத்த அளவு (மீட்டரில்) | | | | **63.00** |

**3. சேலை:**

| **வ.எண்** | **விபரம்** | **நபர்கள்** | **ஒரு நபருக்கு 2 சீருடைகள்** | **மொத்த அளவு** |
|---|---|---|---|---|
| 1 | தூய்மை பணியாளர்கள் பெண்கள் | 2 | 2 | 4 |
| 2 | அலுவலக உதவியாளர் பெண் | 1 | 2 | 2 |
| மொத்த எண்ணிக்கை | | | | **6** |

**3. ரவிக்கை :**

| **வ.எண்** | **விபரம்** | **நபர்கள்** | **ஒரு நபருக்கு 2 சீருடைகள் (மீ)** | **மொத்த அளவு (மீ)** |
|---|---|---|---|---|
| 1 | தூய்மை பணியாளர்கள் பெண்கள் (0.80மீx2) | 2 | 1.60 | 3.20 |
| 2 | அலுவலக உதவியாளர் பெண் (0.80மீx2) | 1 | 1.60 | 1.60 |
| மொத்த அளவு (மீட்டரில்) | | | | **4.80** |

**4.தலைப்பாகை :**

| **வ.எண்** | **விபரம்** | **நபர்கள்** | **ஒரு நபருக்கு 2 சீருடைகள் (மீ)** | **மொத்த அளவு (மீ)** |
|---|---|---|---|---|
| 1 | தூய்மை பணியாளர்கள்<br>ஆண்கள் –12<br>பெண்கள் – 2 | 14 | 2 | 28 |

| **வ.எண்** | **துணி விபரம்** | **தொகை** | **மீட்டர்** | **மொத்த தொகை** |
|---|---|---|---|---|
| 1 | காக்கி பேண்ட் துணி | 166 | 46.80 | 7768.80 |
| 2 | காக்கி சட்டை துணி | 77 | 63 | 4851 |
| 3 | புளூ கலர் சேலை | 460 | 6 | 2760 |
| 4 | புளூ கலர் சாக்கெட் துணி | 77 | 4.80 | 369.60 |
| 5 | பச்சை கலர் தலைப்பாகை துணி | 73 | 28 | 2044 |
| மொத்த தொகை | | | | **17793.40** |
| GST% | | | | **889.67** |
| மொத்தம் வழங்க வேண்டிய தொகை | | | | **18683.07** |

**அலுவலக குறிப்பு :**

1. இந்நகராட்சியில் பணியாற்றி வரும் ஒட்டுநர்கள், துப்புரவு பணி மேற்பார்வையாளர்கள், துப்புரவு பணியாளர்கள் ஆகியோர்களுக்கு 2022–2023ம் ஆண்டிற்கு வழங்க வேண்டிய சீருடைகளை கோ ஆப் டெக்ஸ், திருநெல்வேலி நிறுவனத்தின் மூலம் கொள்முதல் செய்ய மன்றம் அனுமதி வழங்கலாம்.

2. மேற்கண்டவாறு சீருடைகள் கொள்முதல் செய்ய ஆகும் செலவுத் தொகை ரூ.18683/- தொகையினை வருவாய் மற்றும் மூலதன நிதியில் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

**<u>தீர்மானம் எண் 174 ; அலுவலக குறிப்பை ஏற்று அனுமதி வழங்கப்பட்டது.</u>**

<u>மன்றப் பொருள் 18 :</u>

செங்கோட்டை நகராட்சி வார்டு 21 காமாட்சி தெரு, காமராஜர் காலனி தெரு, வார்டு 19 ராமசாமி தெரு, வார்டு 19 புலவர் தெரு மற்றும் வார்டு 2 சாஸ்திரி தெரு ஆகிய பகுதிகளில் சிறு மின் விசை மோட்டார்கள் பழுதாகியுள்ளது. மேற்படி பகுதியில் பழுதான சிறுமின் விசைம் பம்புகளை ரூ.1,20,000/- மதிப்பீட்டில் பழுது நீக்கம் செய்ய 20.10.2022 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் விவரம் மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

| **வ.எண்** | **ஒப்பந்தக்காரர் பெயர்** | **ஒப்பந்த விகிதம்** |
|---|---|---|
| 1. | திரு.M.அசன்கனி | மதிப்பீட்டை விட 0.01% குறைவு |
| 2. | திரு.D.ஆபேல் ஜெயசீலன் | மதிப்பீட்டை விட 7.50% அதிகம் |

அலுவலக குறிப்பு :

வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் வ.எண்1, திரு.M.அசன்கனி என்பவரால் கொடுக்கப்பட்டுள்ள குறைந்த ஒப்பந்தப் புள்ளியினை மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>தீர்மானம் எண் 175 ; அனுமதி வழங்கப்பட்டது.</u>**

நகர்மன்ற தலைவர்
செங்கோட்டை நகரமன்றம்

பெறுநர்,

நகராட்சி நிர்வாக இயக்குநர்,சென்னை

மாவட்ட ஆட்சித்தலைவர் தென்காசி

நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் திருநெல்வேலி